இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 09-08-2024

# வங்கம் எரிவது ஏன்?

வங்க தேசமே எரிகிறது. வங்க தேசத்தின் தந்தையாகப் போற்றப்பட்ட முஜிபுர் ரகுமானின் சிலை அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டின் பிரதமரே தலைமறைவு ஆகி, இந்தியாவுக்குள் வந்து விட்டார். அவரது வீட்டுக்குள் போராட்டக்காரர்கள் புகுந்துவிட்டார்கள். அந்த நாட்டின் ஆட்சியை ராணுவம் ஏற்றுக் கொண்டு விட்டது. உடனே இதனை அந்நிய நாட்டு சதி என்று சொல்லி மூடப் பார்க்கிறார்கள். உண்மையான காரணம் உணரப்படுவதாகத் தெரியவில்லை.

**1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இருந்து பிரிந்து வங்கதேசம் உருவானது. இந்தப் போரில் உயிர் இழந்த ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு அரசு சார்பில் 30 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.**

**இந்த இடஒதுக்கீடு அதிகம் என்று சொல்லி வங்கதேச மாணவர்கள் கடந்த ஜீன் மாதம் போராட்டம் தொடங்கினார்கள். அப்போது ஏற்பட்ட கலவரத்தில் 200க்கும் மேற்பட்டோர் பலியானார்கள்.**

இது தொடர்பான வழக்கை ஜீலை 21 ஆம் தேதியன்று வங்கதேச உச்சநீதிமன்றம் விசாரித்தது. வங்கதேச சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான இடஒதுக்கீட்டை 5 விழுக்காடாக நீதிமன்றம் குறைத்தது. மாணவர்கள் போராட்டம் அமைதியானது. இந்த நிலையில் மாணவர் போராட்டத்தை தூண்டியதாக 6 பேரைக் கைது செய்த போலீஸார் ரகசிய இடத்தில் வைத்து அவர்களை கடுமையாக விசாரித்தார்கள். அவர்கள் கடுமையாக தாக்கப்பட்ட வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பரவியது. அடங்கி இருந்த மாணவர் போராட்டம் மீண்டும் அதிகமானது. பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை வைத்தார்கள்.

தலைநகர் டாக்கா உள்பட வங்கதேசத்தில் பல்வேறு காவல் நிலையங்கள் சூறையாடப்பட்டது. சிராஜ் கஞ்ச் காவல் நிலையத்துக்குள் புகுந்த போராட்டக்காரர்கள், அங்கிருந்த 14 காவலர்களை படுகொலை செய்தார்கள். டாக்காவில் 2 முன்னணி நாளிதழ் அலுவலகங்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஷேக் ஹசீனாவின் கட்சியின் பெயர் அவாமி லீக் என்பது ஆகும். அந்தக் கட்சியின் அலுவலகத்தை தீ வைத்து கொளுத்திவிட்டார்கள். டாக்காவில் உள்ள நாடாளுமன்ற வளாகத்துக்குள் போராட்டக்காரர்கள் நுழைந்துவிட்டார்கள். பிரதமர் ஹசீனாவின் வீட்டுக்குள் பல்லாயிரக் கணக்கானவர்கள் நுழைந்துவிட்டார்கள். வீடே சூறையாடப்பட்டது. டாக்காவில் மட்டும் ஒரே நேரத்தில் 4 லட்சம் பேர் திரண்டு விட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

**போராட்டம் இவ்வளவு பெரிய வன்முறையாக, தொடர் வன்முறையாக மாறுவதற்கு என்ன காரணம்? கடந்த ஜனவரி மாதம் தான் அந்த நாட்டில் தேர்தல் நடந்தது. ஷேக் ஹசீனா மீண்டும் வெற்றி பெற்றார். முக்கிய எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியக் கட்சியானது பொதுத் தேர்தலையே புறக்கணித்ததால் ஹசீனாவுக்கு வெற்றி சாதாரணமாகக் கிடைத்தது. மொத்தம் 16 கட்சிகள், பொதுத் தேர்தலைப் புறக்கணித்தன. இருந்தாலும் ஏழு மாதத்துக்குள் அவருக்கு எதிராக இவ்வளவு பெரிய எதிர்ப்பு அலை கிளம்ப என்ன காரணம்?**

வங்கதேச கலவரத்தின் பின்னணியில் பிற அன்னிய தேசத்தின் உளவு அமைப்புகளின் பங்கு இருப்பதாக செய்திகளை பரப்புகிறார்கள். இது உண்மையான காரணத்தை உணரவிடாமல், அல்லது மறைக்கும் தந்திரம் ஆகும்.

**ஏழு மாதத்துக்கு முன் பிரதமர் ஆனவர், தொடர்ந்து 15 ஆண்டுகளாகப் பிரதமராக இருந்தவர் தனது பதவியை விட்டு விலகி இன்னொரு நாட்டில் தஞ்சம் அடைய வேண்டிய சூழல் எதனால் ஏற்பட்டது? தனது ஆட்சிக்கு எதிராக கருத்துச் சொன்னவர்களை, போராட்டம் நடத்தியவர்களை, 'அன்னிய நாட்டின் கைக்கூலிகள்' என்று கொச்சைப்படுத்தும் வகையில் இழிவான ஒரு சொல்லை ஜீலை 14 ஆம் தேதி அன்று தொலைக்காட்சியில் பயன்படுத்தினார் பிரதமர் ஹசீனா. 'தேசத் துரோகி' என்பதை கெட்ட வார்த்தையாகச் சொல்வது ஆகும். இதுதான் மாணவர்களை அதிகமாக கோபப்படுத்தியது. சொந்த நாட்டு மக்களை தேசத்துரோகிகள் என்று சொல்வதா? என்பதுதான் மாணவர்கள், இளைஞர்களின் கோபம் ஆகும்.**

**30 விழுக்காடு இடஒதுக்கீடு என்பதை 5 விழுக்காடாக உச்சநீதிமன்றமே குறைத்துவிட்டது. அதன்பிறகும் போராட்டம் நடக்கக் காரணம், இந்த வார்த்தைதான். 'கண்டதும் சுட உத்தரவு' போடப்பட்டது. அதுவும், மாணவர்களது கோபத்தை அதிகம் ஆக்கியது.**

வேலையில்லாத் திண்டாட்டம் வங்க தேசத்தில் அதிகமாகி வருகிறது. கல்லூரிகளை முடித்துவிட்டு வெளியில் வந்து, வேலை கிடைக்காமல் இருப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இதற்கான எந்தத் தீர்வையும் ஹசீனா அரசாங்கம் செய்யவில்லை. போராட்டக்காரர்கள் மனதில் பொங்கி நிற்பது இதுதான் என அங்கிருந்து செய்திகள் வழங்கும் பத்திரிக்கையாளர்கள் சொல்கிறார்கள். "வங்க தேசத்தில் ஜனநாயகம் இல்லாததால்தான் இவை எல்லாம் நடக்கிறது" என்று வங்க தேசத்தைச் சேர்ந்தவரும் நோபல் பரிசு பெற்றவருமான முகமது யூனுஸ் சொல்லி இருக்கிறார்.

**காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா, ராணுவம் உள்பட யாராலும் கட்டுப்படுத்த முடியாத போராட்டத்தை மாணவர்கள் முன்னெடுத்தார்கள். இது ஒரு பாடம். வங்கதேசத்துக்கு மட்டுமல்ல; உலகம் முழுக்க உள்ள ஒவ்வொரு சர்வாதிகாரிக்கும் இது ஒரு பாடம் என்று சொல்லி இருக்கிறார்.**

**இது உலகம் கவனிக்க வேண்டிய பாடம் ஆகும்!**

---

## உத்திரமேரூர் தொகுதி - திருப்புலிவனம் ஊராட்சியில்

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மனு பெற்று, நல உதவிகள் வழங்கினார்!

காஞ்சிபுரம், ஆக. 9 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி 'மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்' காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் திருப்புலிவனம் ஊராட்சியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று முன்தினம் (07.08.24) காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

நிகழ்ச்சியினை மாவட்டக் கழகச் செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் தொடக்கி வைத்து கோரிக்கை மனுக்களை பெற்று, நல திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் உத்திரமேரூர் ஒன்றியக் குழு பெருந் தலைவர் திருமதி. ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய கழக செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் பொ.சசிகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், ஒன்றிய கவுன்சிலர்கள் தயாளன், வீரம்மாள் மாயகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி கார்த்திகேயன், ஊராட்சி மன்ற தலைவர்கள் பிரதாப், மூர்த்தி, இளைஞர் அணி யுவராஜ் துணை அமைப்பாளர் கோபிநாதன், ஆதி, பரணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், கழக அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

---



சென்னை எழும்பூர், கோ-ஆப்டெக்ஸ் வணிக வளாகத்தில் நடைபெற்ற 10 வது தேசிய கைத்தறி நாள் விழாவில் நேற்று முன்தினம் (07.08.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கைத்தறி துறையின் மூன்றாண்டு சாதனை புத்தகத்தினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மை செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறித் துறை இயக்குநர் அ.சண்முக சுந்தரம், கோஆப்டெக்ஸ் செயலாட்சியர் தீபக் ஜேக்கப், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் நேற்று முன்தினம் (07.08.2024) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பேரூரில் அமைக்கப்பட்டுவரும் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இவ்வாய்வின் போது, திருப்போரூர் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச. அருண்ராஜ், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன், செங்கல்பட்டு சார் ஆட்சியர் வெ.நாராயண சர்மா, சென்னை குடிநீர் வாரிய தலைமை பொறியாளர் திருமதி.வெ.திலகவதி, மேற்பார்வை பொறியாளர், திருமதி. இ.சாந்தி செயற்பொறியாளர் ஸ்.கிருபாகரவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.

---

## சென்னை குடிநீர் வாரியம் சார்பில் ரூ. 4 ஆயிரத்து 276 கோடியே 44 லட்சத்தில்

# பேரூரில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையக் கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் கே.என். நேரு ஆய்வு!

சென்னை, ஆக.9-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் நேற்று முன்தினம் (07.08.2024) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பேரூரில் அமைக்கப்பட்டுவரும் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரின் நீண்ட கால குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு கடல்நீரை குடி நீராக்கும் நிலையங்களை அமைத்து வருகிறது.

அதனடிப்படையில், முதன்முதலாக தமிழ்நாட்டில் மீஞ்சூர் காட்டுப்பள்ளியில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010-ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையில், 23.02.2010 அன்று நெம்மேலியில் அன்றைய துணை முதலமைச்சரான தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.805 கோடியே 8 லட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட இரண்டாவது கடல்நீரை குடி நீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகள் முடிக்கப்பட்டு தற்போது சுமார் 10 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், நெம்மேலியில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கான பணிகள் முடிக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2024 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கப்பட்டு 9 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னையின் வளர்ச்சிக்கேற்ப குடிநீர் ஆதரங்களை மேம்படுவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.08.2023 அன்று சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில், 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

அதன் அடிப்படையில் இந்நிலையத்தின் கட்டுமான பணிகள் தற்போது முழுவீச்சில் நடைப்பெற்று வருகிறது. சுற்றுச்சுவர் கட்டுமான பணி, சுத்திகரிக்கப்பட்ட நீர்சேகரிப்பு தொட்டி (Product water tank), நீர்சேகரிப்பு தொட்டி (Clear water reservoir), கசடுகளை கெட்டிப்படுத்தும் பிரிவு (Sludge Thickener), நிர்வாக கட்டிடம் (Administration building) மற்றும் கடல் நீரை உட்கொள்ளும் கட்டமைப்பு (Intake Structure) பண்டகசாலை (Warehouse), ஊடுருவி தொட்டி (RO Permeate Tank) மற்றும் நடுநிலைபடுத்தும் தொட்டிகளுக்கான (Neutralization Pit) பணிகள் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையத்தில், கடல்நீரை குடிநீராக்க 1150 மீட்டர் நீளத்திற்கு கடலுக்குள் HDPE குழாய்கள் பதிக்கப்படும். மேலும், இந்நிலையத்தில் அமைக்கப்படும் நீர் கரைந்த காற்று அலகுகள் (Dissolved Air Floatation) மற்றும் இரட்டை ஈர்ப்பு மணல் வடிகட்டி அலகுகள் (Dual Media Filter) மற்ற வழக்கமான நிலையங்களை விட நவீன முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அலகுகள் மூலம் கடலில் உள்ள கசடுகள் (மிதப்பவை, துகள்கள்) தற்போதுள்ள நிலையிலும், அதன் பிறகு கடல்நீரை குடி நீராக்கும் திறனை நிலையாகப் பெறும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்காக, இந்நிலையத்திலிருந்து போரூர் வரை 59 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய் பதிக்கப்படும்.

இந்த நிலையத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள 20 ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 22.67 இலட்சம் மக்கள் பயன் அடைவார்கள் என அமைச்சர் தெரிவித்தார்.

இப்பணிகளை ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள் அனைத்து பணிகளையும் குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின் போது, திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச. அருண்ராஜ், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன், செங்கல்பட்டு சார் ஆட்சியர் வெ.நாராயண சர்மா, சென்னை குடிநீர் வாரிய தலைமை பொறியாளர் திருமதி.வெ.திலகவதி, மேற்பார்வை பொறியாளர், திருமதி. இ.சாந்தி செயற்பொறியாளர் ஸ்.கிருபாகரவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.

---

# விழுப்புரம் தெற்கு மாவட்ட அணிகளின் கூட்டம்!

## டாக்டர் பொன். கௌதம சிகாமணி தலைமையில்!

விழுப்புரம், ஆக. 9 -

விழுப்புரம் தெற்கு மாவட்ட அனைத்து அணிகளின் கூட்டம் மாவட்டச் செயலாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கான பணிகள், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, அணிகளின் ஆக்கப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப் பட்டது.

கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் டாக்டர்.இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா. கற்பகம், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் தேன்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி செல்வராஜ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி செ.தினகரன், பொறியாளர் அணி புகழ். செல்வகுமார், மாணவர் அணி ஸ்ரீ வினோத், தொண்டர் அணி கபாலி,

வழக்கறிஞர் அணி சுவை.சுரேஷ், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன்,

விளையாட்டு மேம்பாட்டு அணி பாலாஜி, விவசாய அணி சீனு செல்வரங்கம், சிறுபான்மை அணி டி.என்.ஏ.தமின், மருத்துவர் அணி டாக்டர் காவிய வேந்தன், சுற்றுச் சூழல் அணி அகிலன்,

மகளிர் அணி அமுதா, மகளிர் தொண்டர் அணி செல்வி, அருள்மொழி, விவசாய தொழிலாளர் அணி அன்புமணி, தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ்பாபு, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி பாலு கார்த்தி, நெசவாளர் அணி ஞானவேல், ஆதிதிராவிடர் நலக்குழு செல்வ பிரேம், இலக்கிய அணி துரை மணிவேலன், கலை இலக்கிய அணி முத்து கணேசன், அயலக அணி நவாஸ் உள்ளிட்ட பலர் மாவட்ட துணை அமைப்பாளர் பலர் கலந்து கொண்டனர்.

---



தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் கலைஞர் அவர்களின் முன்னாள் செயலாளர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் கலைஞர் அவர்களின் பாதுகாப்பு முன்னாள் அலுவலர் பாண்டியன் உள்ளார்.